தொழில், விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நிலம் ஒதுக்கீடு

* 321 வினா—திரு. என். டென்னிஸ்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கூடுவாஞ்சேரியில் பெரும் பரப்பளவுள்ள நிலத்தைக் குறைந்த வாடகைக்கு ஒதுக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒரு ஹெக்டேர் நிலத்திற்கு வருடம் ஒன்றிற்கு பெயரளவு வாடகையாக ரூபாய் பத்து வீதம் செங்கற்பட்டு மாவட்டம் கூடலூர் ஒதுக்கக்காட்டுப் பகுதியில் உள்ள சுமார் ஒரு சதுர மைல் பரப்பளவுள்ள காட்டு நிலங்களை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்துவதற்கு சென்னை தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வழக்கமான நிபந்தனைகளின் கீழ் தற்சமயம் ஐந்து ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கு 1972-ம் வருடம் ஏப்ரல் மாதத்தில் இந்த அரசு முடிவு செய்தது.

THIRU N. DENNIS: May I know the details of research that will be conducted by this Association?

THE HON. THIRU S. MADHAVAN: 'Automative Test Track' என்ற ஒன்றை அமைத்து கார்களுக்கு அந்த வசதி கொடுக்க முயற்சியெடுக்கிறார்கள் என்ற செய்திதான் இருக்கிறது.

திரு. ஆ. பார்த்தாமன்: தலைவரவர்களே, கூடுவாஞ்சேரியில் அமைக்கப் பட்டிருக்கும் அந்த இடத்திற்கு வெளிநாட்டு வல்லுநர்களின் உதவி கிடைக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதனுடைய திட்டங்களெல்லாம், டெல்லியிலே சி.எஸ்.ஐ.ஆர். அவர்களுடைய அனுமதியைப் பெற்று நாம் ஒப்புக் கொள்ளலாம் என்று நினைக்கிறோம். அதற்குப் பிறகுதான் அதனுடைய விவரங்கள் தெரியும்.

Co-operative Tea Factories

* 322 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to set up more tea factories under the Co-operative sector in this State: and

(b) if so, the details thereof?

1973 மார்ச் 10]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) நீலகிரி மாவட்டத்தில் மேலும் எட்டு கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளை அமைக்க தேயிலை வாரியத்திற்கு ஒரு திட்டம் அனுப்பப்பட்டதில் இரண்டு தொழிற்சாலைகளை அமைக்க தேயிலை வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டு விட்டது. திட்டத்தின் மீதமுள்ள பகுதி தேயிலை வாரியத்தின் ஆய்வில் இருக்கிறது.

THIRU N. DENNIS : May I know the total number of workers who will be engaged in this co-operative society?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, மொத்தம் ஏக்கர் கணக்குதான் இருக்கிறது. எத்தனை தொழிலாளர்கள் வேலைபெற முடியும் என்ற கணக்கு இல்லை.

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, இந்த இரண்டு தொழிற்சாலைகள் எந்தெந்த இடங்களில் நிறுவப்படும் என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூடலூரில் பூர்வாங்க வேலைகள் முடிந்து விட்டன. மேலூரில் இப்பொழுது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இம்மாதிரி 'டீ ஃபேக்டரீஸ்' ஆரம்பிக்க லாயக்கான வேறு காட்டுப் பகுதிகள் வேறு பக்கங் களிலேயிருந்தால் கூட்டுறவு அடிப்படையில் துவங்குவதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இப்பொழுது நீலகிரி மாவட்டத்திலே இந்தத் திட்டம் இருக்கிறது. வேறு பகுதியிலே இருக்கும் என்ற தகவலைக் கொடுத்தால் அதையும் பரிசீலிக்கலாம்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் மின்வெட்டின் காரணமாக உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப் பட்டுள்ளது என்பதை அரசு அறியுமா? உடனடியாக அந்த வெட்டை நீக்கி உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மின்வெட்டு எல்லோருக்கும் பொது வானது. கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளும் அதற்குக் கட்டுப்படத்தான் வேண்டும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS